2nd August 1966]

திரு. ஆ. தங்கவேலு : சார், போக்கு வரத்து தடைப்படுகிறது என்று இந்தப் பாலம் கட்டப் படுகிறதா அல்லது வெள்ளத்தினால் ஆபத்து ஏற்படுகிறது என்று கட்டப்படுகிறதா அல்லது மத்திய சர்க்கார் அமைச்சர் திரு. ஓ. வி. அளகேசன் சொந்தக்காரர் திரு. முத்து முதலியார் என்பவருக்கு காண்ட்ராக்ட் கொடுக்க வேண்டும் என்பதற்காகக் கட்டப்படுகிறதா ?

கனம் திரு. வெ. ராமையா : குறிப்பாக ஒருவருக்கு காண்ட்ராக்ட் கொடுக்க வேண்டும் என்று எந்த ஒரு வேலையையும் கொடுப்பதில்லை. இது மெயின் ரோடில் இருப்பதாலும், கலுங்கல் பக்கத்தில் இருப்பதாலும், வெள்ளம் வந்தால் கெடுதல் வரும் என்றெல்லாம் இவற்றை யெல்லாம் மனதில் வைத்துத்தான் இந்த வேலை இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்திலேயே ஆலோசிக்கப்பட்டு, நிபுணர் பரிசிலனை செய்து சாங்ஷன் கொடுக்கப்பட்டிருக்கிறது. 9-00 a.m.

சிதம்பரநாதன்பேட்டை மதகு

* 35 கேள்வி.—திரு. சி. சிவசுப்பிரமணியம் : கனம் உணவு அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) சிதம்பரம் தாலுக்காவில் சிதம்பரத்திலிருந்து நடராஜபுரம் ரோட்டில் பஸ் போக்குவரத்துக்கு இடைஞ்சலாக இருக்கும் சிதம்பரநாதன்பேட்டை (கலுங்கு) மதகை இடித்துவிட்டு சீர் செய்ய அரசாங்கத்தில் ஏதேனும் திட்டம் உண்டா ?

(இ) ஆமெனில், எப்பொழுது வேலை எடுத்துக்கொள்ளப்படும்?

கனம் திரு. வெ. ராமையா : (அ) இத்தகைய செயற்குறிப்பு எதுவும் தற்போது இல்லை.

(இ) இக் கேள்விக்கு இடமில்லை.

Headquarters of Dharmapuri district

* 36 Q.—Sri M. KALYANASUNDARAM : Will the Hon. Minister for Food be pleased to state—

(*a*) the details of the proposals for housing the district offices at Dharmapuri for the new district; and

(*b*) whether there is any scheme before the Government for the improvement of Dharmapuri town so as to make it suitable as district headquarters and if so, the details thereof?

THE HON. SRI V. RAMAIAH : (*a*) In view of Emergency, a minimum necessary building programme for Dharmapuri district, phased over a period of three years, has been taken up with provision for construction of only important offices like Collector's Office, Office of the District Superintendent of Police and quarters for the Collector, the Superintendent of Police, the District